# 20-04-2024 செய்தி

## இந்தியாவிலேயே தயாரிக்கப்பட்ட பிரம்மோஸ் ஏவுகணை பிலிப்பைன்ஸுக்கு ஏற்றுமதி

- இந்தியாவில் தயாரிக்கப்பட்ட பிரம்மோஸ் ஏவுகணை முதல் முறையாக பிலிப்பைன்ஸ் நாட்டுக்கு நேற்று ஏற்றுமதி செய்யப்பட்டது.
- இந்தியா-ரஷ்யா கூட்டு சேர்ந்து பிரம்மோஸ் ஏரோஸ்பேஸ் என்ற நிறுவனத்தை இந்தியாவில் தொடங்கி, பிரம்மோஸ் ஏவுகணைகளை தயாரித்தன.
- இந்தியாவின் பிரம்மபுத்ரா நதி மற்றும் ரஷ்யாவின் மோஸ்க்வா நதி ஆகியவற்றின் பெயர் சேர்க்கப்பட்டு பிரம்மோஸ் பெயர் உருவாக்கப்பட்டது.
- நிலம், போர்க்கப்பல்கள், நீர்மூழ்கி கப்பல்கள் மற்றும் போர் விமானங்களில் இருந்து ஏவும் வகையிலான பிரம்மோஸ் சூப்பர்சோனிக் ஏவுகணைகள் தயாரிக்கப்பட்டன.
- இந்த ஏவுகணை 2.8 மேக் வேகத்தில் (ஒலியைவிட 3 மடங்கு அதிகம்) சீறிப்பாய்ந்து 290 கி.மீ தூரத்தில் உள்ள இலக்குகளை தாக்கும் திறன் படைத்தது.
- தென்சீனக் கடல் பகுதியில் சீன கடற்படை ஆதிக்கம் செலுத்துவதால், எதிரிநாட்டு போர்க்கப்பல்கள் மீது தாக்குதல் நடத்த பிரம்மோஸ் ஏவுகணைகளை இந்தியாவிடம் இருந்து வாங்க பிலிப்பைன்ஸ் முன்வந்தது.
- அதன்படி இந்தியாவில் தயாரிக்கப்பட்ட பிரம்மோஸ் ஏவுகணைகளின் முதல் பேட்ஜ், பிலிப்பைன்ஸ் நாட்டுக்கு நேற்று அனுப்பி வைக்கப்பட்டன.
- இது பிரம்மோஸ் ஏவுகணையின் முதல் ஏற்றுமதி என்பது குறிப்பிடத்தக்கது.
- அர்ஜென்டினா உட்பட இன்னும் சில நாடுகளும் இந்தியாவிடமிருந்து பிரம்மோஸ் ஏவுகணைகளை வாங்க விருப்பம் தெரிவித்து உள்ளன.

## கடற்படை புதிய தலைமைத் தளபதி தினேஷ் குமார் திரிபாதி

- இந்திய கடற்படையின் புதிய தலைமைத் தளபதியாக தினேஷ் குமார் திரிபாதி நியமிக்கப்பட்டுள்ளார்.
- இவர் கடற்படையின் துணைத் தளபதியாக தற்போது பதவி வகித்து வருகிறார்.
- இந்திய கடற்படையின் தற்போதைய தலைமைத் தளபதி ஆர்.ஹரி குமாரின் பதவிக் காலம் இம்மாத இறுதியில் நிறைவடையவுள்ளதையடுத்து தினேஷ் குமார் திரிபாதி பதவியேற்கவுள்ளார்.

## பாலஸ்தீனத்துக்கு முழு உறுப்பினர் அந்தஸ்து

- பாலஸ்தீனத்தை ஐ.நா.வின் முழுமையான உறுப்பு நாடாக்கும் தீர்மானத்தை தனது 'வீட்டோ' அதிகாரத்தைப் பயன்படுத்தி அமெரிக்கா ரத்து செய்தது.
- 193 உறுப்பு நாடுகளைக் கொண்ட ஐ.நா. பொதுச் சபையில் பாலஸ்தீனத்தையும் இணைப்பதற்கான வரைவுத் தீர்மானம் ஐ.நா. பாதுகாப்பு கவுன்சிலில் கொண்டுவரப்பட்டது.
- அல்ஜீரியா கொண்டுவந்த அந்தத் தீர்மானத்துக்கு ஆதரவாக, கவுன்சிலின் 15 உறுப்பு நாடுகளில் 12 நாடுகள் வாக்களித்தன.
- பிரிட்டனும் ஸ்விட்சர்லாந்தும் வாக்கெடுப்பைப் புறக்கணித்தன. எனினும், தீர்மானத்தை தனது சிறப்பு 'வீட்டோ' அதிகாரத்தைக் கொண்டு அமெரிக்கா ரத்து செய்தது.
- அந்தத் தீர்மானம் நிறைவேற்றப்பட்டிருந்தால் ஐ.நா. பொதுச் சபையின் 194-ஆவது உறுப்பு நாடாக பாலஸ்தீனம் அங்கீகரிக்கப்பட்டிருக்கும்.
- தற்போதைய நிலையில் ஐ.நா. பொதுச் சபையில் பார்வையாளராக மட்டுமே பாலஸ்தீனம் இருந்துவருகிறது.
- 2012-ஆம் ஆண்டில் வழங்கப்பட்ட இந்த அந்தஸ்தின் மூலம் பொதுச் சபை நிகழ்ச்சிகளில் பங்கேற்க பாலஸ்தீனத்தால் முடியும்; ஆனால், வாக்கெடுப்புகளில் பங்கேற்க முடியாது.

SURESH

# தேவையான திருத்தம்!

- இந்தியாவுக்கும், மோரீஷஸுக்கும் இடையேயான இரட்டை வரிவிதிப்புத் தவிர்ப்பு ஒப்பந்தத்தில் திருத்தங்கள் மேற்கொள்ளப்பட்டு இருப்பது மிகச் சரியான முடிவு.
- இரு நாடுகளுக்கும் இடையேயான இரட்டை வரி விதிப்புத் தவிர்ப்பு ஒப்பந்தத்தை சாதகமாகப் பயன்படுத்திக் கொண்டு இந்தியாவில் உள்ள ஊழல் பணம் மோரீஷஸ் போன்ற நாடுகள் வழியாக இந்தியாவில் முதலீடு செய்யப்பட்டு வந்தது.
- பொருளாதார கூட்டுறவுக்கும், வளர்ச்சிக்குமான ஓஇசிடி நிறுவனத்தில் 37 ஜனநாயக நாடுகள் இணைந்திருக்கின்றன.
- அவை சர்வதேச வர்த்தக்கதிலும் நிதி நிர்வாகத்திலும் விதிமுறைகளை ஏற்படுத்தி இருக்கின்றன. அந்த ஓஇசிடி-யில் இந்தியா இணைந்திருக்கிறது.
- அதனால் இரட்டை வரிவிதிப்புத் தவிர்ப்பு ஒப்பந்தங்களை சாதகமாக பயன்படுத்தி நடைபெறும் முறைகேடுகளைத் தவிர்ப்பதில் ஏனை உறுப்பு நாடுகளைப் போலவே இந்தியாவும் முனைப்புக் காட்டுகிறது.
- 1982-இல் இந்தியாவுக்கும் மோரீஷஸுக்கும் இடையே இரட்டை வரிவிதிப்புத் தவிர்ப்பு ஒப்பந்தம் மேற்கொள்ப்பட்டதற்கு ஒரு காரணம் இருந்தது.
- அந்நிய முதலீடுகள் இந்தியாவுக்கு கிடைப்பது அரிதாக இருந்த காலம் அது. அதனால் அந்த முதலீடுகள் மீதான இரட்டை வரி விதிப்பைத் தவிர்ப்பதுதான் ஒப்பந்தத்தின் நோக்கம்.
- எந்த நாட்டிலிருந்து முதலீடு செய்யப்படுகிறதோ, அந்த நாட்டில் முதலீட்டால் கிடைக்கும் லாபத்துக்கு வரி செலுத்தினால் போதும்.
- மோரீஷஸ் போன்ற நாடுகளில் கேபிட்டல் கெயின்ஸ் எனப்படும் முதலீட்டின் மீதான லாபத்திற்கு பூஜ்ஜிய சதவீதம் வரி விதிப்பு என்பதால், முதலீடுகள் மோரீஷஸ் மூலம் இந்தியாவுக்கு வரத்தொடங்கின.
- இந்தியாவில் அந்த முதலீட்டால் கிடைக்கும் லாபத்துக்கு வரி செலுத்த வேண்டியதில்லை.
- தற்போது மேற்கொள்ளப்படும் திருத்தத்தின் மூலம் இரண்டு நாடுகளும் இரட்டை வரிவிதிப்புத் தவிர்ப்பை அகற்றி வரி ஏய்ப்பைத் தடுக்க முற்பட்டிருக்கின்றன.
- அதேபோல, இந்த ஒப்பந்தத்தைத் தவறாக பயன்படுத்த முற்பட்டால் அவர்களுக்குச் சலுகை மறுக்கப்படலாம் என்கிற திருத்தமும் மேற்கொள்ளப்பட்டிருக்கிறது.
- இதுவரை மோரீஷஸ் அரசு வழங்கிய குடியிருப்புச் சான்றிதழ் இருந்தாலே வரிவிலக்கை முதலீட்டாளர்களுக்கு இந்திய அரசு அளித்து வந்தது.
- புதிய திருத்தத்தின்படி, குடியிருப்புச் சான்றிதழுக்கு அப்பால், முதலீட்டாளர்களின் பின்னணி ஆய்வு செய்யப்படுவதன் அடிப்படையில் வரி விதிப்பை மேற்கொள்ள அதிகாரம் வழங்கப்படுகிறது.
- இந்தியா மட்டுமல்ல, சர்வதேச அளவிலும் இந்தப் பிரச்சனை காணப்படுகிறது. கார்ப்பரேட் நிறுவனங்கள் வரிகளைத் தவிர்ப்பதற்காக குறைந்த வரி உள்ள நாடுகளில் தங்களது தலைமையகங்களை அமைத்துக் கொள்கின்றன.
- அதனால், ஆண்டுதோறும் 50 பில்லியன் முதல் 100 பில்லியன் டாலர் வரை வருவாய் இழப்பை அமெரிக்கா எதிர்கொள்கிறது.
- 2016-இல் 100-க்கும் அதிகமான நாடுகள் வரிவிதிப்பு ஒப்பந்தங்களில் மாற்றத்தை ஏற்படுத்தவும், பன்னாட்டு நிறுவனங்கள் வரித் தவிர்ப்பை மேற்கொள்ளாமல் இருக்க சர்வதேச வரி விதிகளை மாற்றவும் ஒருங்கிணைந்தன.
- அந்த ஒப்பந்தத்தில் ‘வரி ஏய்ப்பு சொர்க்கங்கள்’ என்று அழைக்கப்படும் மோரீஷஸ், லக்சம்பர்க், நெதர்லாந்து, ஹாங்காங் உள்ளிட்டவையும் கையொப்பமிட்டன.
- இந்தியாவும் மோரீஷஸும் இரட்டை வரிவிதிப்புத் தவிர்ப்பு ஒப்பந்தத்தில் மேற்கொண்டிருக்கும் திருத்தம், வரி ஏய்ப்பையும் ஊழல் பணச்சுழற்சியையும் ஓரளவுக்கு தடுக்கும் என்று நம்பலாம்!